பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஐப்பசி 25உ (11—11—67) சனி

வெளியூர்: ஐப்பசி 26உ (12—11—67) ஞாயிறு [இதழ்: 124

'தொழிலாளர்களுடன் போராட வேண்டாம்—குறைபாடுகளுடன் போராடுவீர்'

'கேரோக்களும் சீர்குலைவுகளும் மட்டும் அமைதியின்மைக்குக் காரணமல்ல'

'பொருளாதாரத் தேக்கநிலையே அனைத்துக்கும் காரணம்'—மேற்கு வங்க அரசின் கவனத்தைக் கவரும் விளம்பரம்

தொழிற்சாலைகளில் 'கேரோ'க்கள், ஒழுங்கின்மை ஆகியவை பெருகியிருப்பதுதான் உற்பத்தியைப் பாதித்திருப்பதுடன், தொழில் அமைதியைக் குலைத்துவிட்டிருப்பதாகவும் குடியரசுத் தலைவர் முதல் சாதாரணக் குடிமகன்வரையில் பேசியும் எழுதியும் வரும்போது, 'கேரோ' முறையின் பிறந்தகமான மேற்கு வங்காளத்தின் அரசு, பணம் கொடுத்து செய்துள்ள பத்திரிகை விளம்பரம் ஒன்றில்—

"'கேரோ'க்களும், ஒழுங்கின்மையும்மட்டும் தொழில் அமைதி கெட்டதற்குக் காரணமல்ல; உற்பத்திக் குறைவுக்கும், வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் நிலையற்றதன்மைக்கும்

பொருளாதாரத் தேக்க நிலையே

காரணமாகும்; எனவே, தொழிலாளர்களுடன் போராடாதீர்; பொருளாதாரத் தேக்க நிலைக்குக் **காரணமான கொள்கைகளுடன் போராடுங்கள்"**

என்று கூறியிருக்கிறது.

பம்பாயிலிருந்து வெளியாகும் 'டைம்ஸ் ஆப் இந்தியா'வின் 10-11-67 இதழில், இந்த விளம்பரம் வெளிவந்திருக்கிறது. அரைப் பக்கம் அளவில் நான்கு பத்தியில் உள்ள இந்த விளம்பரத்துக்கான கருத்துக்கு ஆதரவாக, ஜி. டி. பிர்லா, டாக்டர் பி. நடராசன், டி. டி. யங், மாக்பர்சன் போன்ற பொருளாதார—தொழில்துறை வல்லுநர்களின் எழுத்துக்களும் பேச்சுக்களும், 'எகனமிக் டைம்ஸ்' போன்ற ஏடுகள்—பல்வேறு வர்த்தகக் கழகங்களும் திரட்டித் தரப்பட்டுள்ளன!

கவனத்தைக் கவரும் மேற்கு வங்க அரசின் இந்த விளம்பரம், இன்னும் சில நாட்களில் ஒரு பிரச்சினையாக வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

'சுயபுத்தி' இல்லாத விளம்பரங்கள்—மக்கள் தீர்ப்பை மதிக்காத போக்கு—எதிர்க்கட்சியாக இருக்கவும் லாயக்கற்ற தன்மை

"தென் சென்னை இடைத்தேர்தலில், காங்கிரசின் தோல்விக்குப் பல்வேறு காரணங்களுக்கிடையில், முக்கியமானவைகளாகப் பின்வருவனவற்றைக் குறிக்கலாம்"

என்றுகூறி, கே. இராமாச்சார் என்னும் வாசகர், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆசிரியருக்கு எழுதி, 11—11—67 இதழில் வெளிவந்துள்ள கருத்துக்களாவன:—

"ஆட்சியில் அவர்கள் இருக்கும்போது—நேருமுதல் ஏனைய தலைவர்கள் வரையில்—அனைவரும், நல்ல எதிர்க் கட்சி இருக்கவேண்டியதன் அவசியத்தினைப் பற்றி வலியுறுத்தி வந்தார்கள்.

"சனநாயகம் சீர்படவும், அரசாங்கத்தினை நேர்மையான பாதையில் நடக்கச் செய்யவும் நல்ல எதிர்க் கட்சி தேவை' என, காங்கிரசுக்காரர்கள் பேசிவந்தனர்!

1967 பிப்ரவரியில் நடந்த தேர்தலில், தமிழக மக்கள், 'ஒரு மாற்றம் இருக்கட்டுமே' என, காங்கிரசுக்கு அந்த வாய்ப்பைத் தந்தார்கள்!

'சட்டமன்றத்தில்—அரசியலில் ஒரு நல்ல எதிர்க் கட்சியாக இருக்கட்டும்' என்ற வாய்ப்பினைப் பொதுமக்கள், காங்கிரசுக்கு அளித்தார்கள்!

ஆனால் அதை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக—மதித்து நடப்பதற்குப் பதிலாகக் காங்கிரசுத் தலைவர்கள், தி மு.க. ஆட்சி பற்றிய பிரச்சாரத்தில், பதட்டத்தைத்தான் காட்டினார்கள்!

'ஓர் ஐந்தாண்டுக் காலம் பொறுமையைக் கடைபிடித்து—எதிர்க் கட்சியாக இருந்து—அதன் மூலம், இழந்த பலம்-கௌரவம் ஆகியவற்றைத் திரும்பப்பெறும் முயற்சியில் காங்கிரசு செயல்படும்'' என்றுதான் அனைவரும் எதிர்பார்த்தனர்!

ஆனால், பிப்ரவரித் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் கடைபிடித்த பிரச்சார முறையைத்தான் (இந்த இடைத் தேர்தலில்) காங்கிரசுக்காரர்கள் கடைபிடித்தார்கள்; ஆனால், (கழகப் பிரச்சாரத்தில் காணப்பட்ட) 'ஒரிஜினலிடி' காங்கிரசின் பிரச்சாரத்தில் இல்லை!''

காதில் விழுந்தது!

'தென் சென்னைத் தேர்தல் முடிவுக்குப் பின் நமது காங்கிரசுக்காரர்கள் கூறும் தோல்விக்கான காரணங்களைப் படித்தீர்களா?"

"பார்த்தேன்; என்ன விசேஷம்?"

"விசேஷம் ஒன்றுமில்லை; எனக்கு ஒரு சந்தேகம்; அவர்களுடைய கட்சியின் தலைவர் பதவிக்காகத் தேர்தலும் நடந்து அதில் காமராசர் பெரும் வித்தியாசத்தில் தோற்றுலும், இதேபோல் 'கள்ள ஓட்டு — அராஜகம் — அநீதி' என்றுதானே காரணம் காட்டுவார்கள்?"

"சரியான கேள்விதான்; ஆனால், பதில் அங்கிருந்துதான் வர வேண்டும்!"

பெரியாருக்கு மாநகராட்சி வரவேற்பு

சென்னை, நவ. 11—

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கட்கு சென்னை மாநகராட்சி வரவேற்பு அளிக்கும்.

புரட்சி நடிகருக்கு மாநகராட்சி வரவேற்பு

சென்னை, நவ. 11—

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு சென்னை மாநகராட்சி நவ. 23-ம் நாளன்று வரவேற்பளிக்க முடிவு செய்துள்ளது.

இந்திய அரசியலில் புதிய கட்சி உதயம்

'பாரதீய கிரந்தி தளம்'—இந்தூரில் பரிமளித்தது!

'பாரதீய கிரந்தி தளம்' என்ற அனைத்திந்திய அரசியல் அமைப்பு, முறையாக நேற்று இந்தூரில் அறிவிக்கப்பட்டிருக்கிறது!

இரண்டு மணி நேர விவாதத்துக்குப் பின்னர், அந்த அமைப்பின் இருபதுக்கு மேற்பட்ட முக்கியமானவர்கள், கொள்கைகள் — நடைமுறைகள் பற்றி ஒரு முடிவுக்கு வந்துள்ளனர்.

பெரும்பாலும் காங்கிரசிலிருந்து பிரிந்தவர்களைக் கொண்டிருக்கும் இப்புதிய அரசியல் கட்சி, 'பாரதீய கிரந்தி தளம்' என்று தனது தற்காலிக பெயரையே நிரந்தரமாகக் கொள்வது என முடிவுசெய்துள்ளது.

கடந்த மே மாதத்தில் காங்கிரசிலிருந்து பிரிந்துவந்தவர்கள் பாட்னாவில் கூடி உருவாக்கியது இந்த அமைப்பு!

டி. கே. குந்தே என்பவர், தற்போதைய செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்.

அமைப்பின் முதல் தேசியமாநாடு இந்தூரில் கூடியது; நாட்டின எந்த மாநிலத்திலும் நிர்வாகத்தில் பங்கு பெறுவதில், காங்கிரசுடன் இந்த அமைப்பு சேராது என பீகார் மாநில முதல்வர் மகாமய பிரசாத் சின்கா, மாநாட்டின் துவக்க உரையின்போது தெளிவுபடுத்தியுள்ளார்.

வங்காளத்தில் தற்போதைய முதல்வராயிருக்கும் அஜாய் முகர்ஜிக்கு ஆதரவு தருவது எனவும் இந்த அமைப்பு முடிவு செய்துள்ளது.

தென் சென்னை இடைத் தேர்தல் முடிவு:

இந்தி ஆதிக்கத்துக்கு எதிராக இன்னுமொரு 'ஓட்டு'!

காங்கிரசின் மாற்றுப் பிரச்சாரம் பலிக்கவில்லை!

தென் சென்னைத் தேர்தல் முடிவு பற்றி 'டைம்ஸ் ஆப் இந்தியா', தனது 10—11—67 இதழில், 'நடப்புச் சம்பவங்கள்' என்ற தலைப்பில் எழுதியுள்ள கருத்துக்கள் வருமாறு:—

"தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்காக நடைபெற்ற இடைத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகம், பிரமிக்கத்தக்க வெற்றியினைப் பெற்றிருக்கிறது!

"1962-ம் ஆண்டிலிருந்தே கழகம் அத்தொகுதியைத் தன்வசம் வைத்திருக்கிறது. 1967 தேர்தலில் திரு. அண்ணாதுரை, 82,000 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றபோது, அது மேலும் உறுதியாயிற்று!

"ஆனால், 1962-வரையில் அந்த இடம் காங்கிரசின் வசம் இருந்தது; எனவே, அதனை மீண்டும் பெற முனைந்த காங்கிரசின் முயற்சியும், ஒரு 'கௌரவப் போட்டி'யாகவே இருந்தது!

"இடைத் தேர்தலில் மேலும் கூடுதலாக 20,000 வாக்கைப் பெற்று, காங்கிரசை மீண்டும் தோற்கடித்திருக்கிறது—தி. மு. கழகம்!

"சென்ற பொதுத் தேர்தலைப் போலவே இந்த இடைத் தேர்தலிலும், மொழிப் பிரச்சினையே முக்கிய பிரச்சார சாதனமாக இருந்திருக்கிறது!

"மத்திய ஆட்சி, நேருவின் உறுதிமொழியைச் சட்டமாக்குவதில் காட்டும் மந்தப் போக்கினைச் சுட்டிக்காட்டி, 'நாடாளுமன்றத்தில் மேலும் ஒரு கழக உறுப்பினர் இடம் பெறுவது, இந்தித் திணிப்புக்கு எதிராக விழும் மேலும் ஒரு வாக்காக அமையும்' என்று தி. மு. க. பிரச்சாரம் செய்தது!

"கழக ஆட்சியின் எட்டு மாத நிர்வாகத்தைவிட, மொழிப் பிரச்சினையே தேர்தல் பிரச்சாரத்தை பெரும் பங்கு 'ஆக்கிரமித்தது!'

"விலைவாசி ஏற்றம், ஒரு படி அரிசித் திட்டம் போன்றவைகளைப் பற்றி மேடைகளில் காங்கிரசு பேச முயற்சித்தது உண்மைதான்; ஆனால், மக்கள் மனதில் இருந்த ஒரே பிரச்சினை மொழி விவகாரம்தான்!"

தோல்விக்கு காரணம் மத்திய அரசாம்!

டில்லிமீது பழிசுமத்துகிறது காமராசர் வட்டாரம்!

"தென் சென்னை மக்கள்சபைத் தொகுதி இடைத் தேர்தல் முடிவு, திராவிட முன்னேற்றக் கழகம்—தி.மு.க. அரசு ஆகியவற்றின் செல்வாக்கையும், தமிழ்நாட்டில் காங்கிரசின் தோல்வியையும் குறிக்கிறது''

என்ற கருத்தை, இங்கு காங்கிரசுத் தலைவர் காமராசருக்கு நெருங்கிய வட்டாரத்தினர் மறுத்துள்ளனர்.

"நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தல், மத்திய அரசின் திட்டங்கள்மீது முடிவு கூறும் தேர்தலே ஆகும்; சட்டமன்றத் தொகுதித் தேர்தல்கள்தாம் மாநில ஆளும் கட்சியைப் பற்றியும், மாநில எதிர்க் கட்சிகளைப் பற்றியும் மக்கள் தீர்ப்புக் கூறும் தேர்தலாகும்''

என்று காமராசரின் வட்டாரத்தில் சொல்லப்படுகிறது.

புதிய மேயர் தேர்தல்

நவ. 29-ல் நடைபெறும்

சென்னை, நவ. 10—

சென்னை நகரின் புதிய மேயர் தேர்தல் இத்திங்கள் 29-ம் நாள் நடக்கும் மாநகராட்சிக் கூட்டத்தில் நடைபெறும்.

மரபுப்படி இந்த முறை முஸ்லீம் ஒருவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். முஸ்லீம், மாநகராட்சி உறுப்பினர்கள் இத்திங்கள் 23-ம் நாள் கூடி மேயர் பதவிக்கான தங்கள் பிரதிநிதியைப் பற்றி தீர்மானிப்பர். அவர்கள் 29-ம் நாள் மாலை 4-30 மணிக்கு மேயரிடம் தங்கள் முடிவைத் தெரிவிப்பார்.

சென்னை மாநகராட்சி ஆண்டு விழா

அண்ணா துவக்கிவைப்பார்

சென்னை, நவ. 11—

சென்னை மாநகராட்சியின் 280-வது ஆண்டு விழா நவ. 21-ம் நாள் நடைபெறவிருக்கிறது.

இந்த விழாவை முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், நேரு விளையாட்டரங்கில் அன்று மாலை 4-மணிக்கு துவக்கிவைப்பார்.

நம் நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1998 ஐப்பசி 25 (11—11—67) சனி

சோவியத் சமுதாயம் வாழ்க!

1917-ம் ஆண்டு நவம்பர் 7-ஆம் நாள், மனித வரலாற்றில் ஒரு திருப்புமுனையைக் குறிப்பிடக்கூடிய மகத்தான நாளாகும். இந்த நாள், உலக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ள நாளுமாகும்.

இந்த ஏழாம் நாளை இறுதியாகக் கொண்டு இரஷ்யாவில் பத்து நாட்கள் நடைபெற்ற புரட்சி, உலக நாடுகள் அனைத்தையுமே கலக்கிவிட்டிருக்கிறது. அதுவரை உலகில் எங்கும் கண்டில்லாத ஒரு புத்தம் புதிய சமுதாய அமைப்பை உருவாக்குவதற்கு இந்த ஏழாம் நாள், சிறந்ததோர் தோற்றுவாயாக அமைந்தது.

'பொதுவுடைமைச் சமுதாயத்தை உருவாக்க எத்தகைய சமுதாய அமைப்பும், எத்தகைய சூழ்நிலையும் இருந்திட வேண்டும்' எனக் கூறப்பட்ட கருத்துக்கு முழுதும் மாருன சூழ்நிலையிலும் சமுதாய அமைப்பிலும் இரஷ்யாவில் புரட்சி வெடித்து, எதிர்பார்த்த வெற்றியையும் பெற்றிருக்கிறது. இந்த அரிய சாதனையைப் புரிந்திருக்கின்றவர்கள், அன்றைய இரஷ்ய மக்களே என்றாலும், அம்மக்களைப் புரட்சியில் ஈடுபடுத்திப் புதியதோர் சமுதாயத்தை அமைப்பதில் வெற்றியைத் தேடித்தந்த மாவீரன் லெனினையும், அவருடைய கூட்டுத் தோழர்களையும் மனித குலத்தால் என்றும் மறக்க முடியாது.

ஜார் சக்கரவர்த்தியின் கொடுங்கோலாட்சியைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றி, தாம் காண விரும்பிய சுரண்டலற்ற சமுதாயத்தை அமைத்திட லெனின் ஆர்வம் கொண்டிருந்தார் என்றாலும், ஐம்பதாண்டுகளுக்குப் பின்னர் உலக நாடுகளின் பாராட்டுதலைப் பெற்றுவரும் சோவியத் சமுதாயத்துக்கு அடிப்படையை அமைத்து, அதைப் பாதுகாத்து வளர்ச்சி கண்ட பெருமை முழுவதும் ஸ்டாலினையே சாரும். ஸ்டாலினுடைய முப்பதாண்டுக் கால ஆட்சியில், இலட்சக்கணக்கானவர்கள் தூக்குமேடைகளிலும், அடிமை முகாம்களில் பலியாகியுமுள்ளனர். ஸ்டாலின் புரிந்ததாகச் சொல்லப்படுகின்ற இக்கொடுமைகள், மிகைப்படக் கூறப்படுவதாக இருக்கலாம். இன்று சோவியத் மக்கள் அடைந்திருக்கின்ற மகத்தான வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும், அத்கொடுமைகள் விலையாகக் கொடுக்கப்பட்டுள்ளன என்றுதான் கொள்ள வேண்டும்.

ஸ்டாலின் மீது, அவருக்குப் பின்னர் அப்பொறுப்பை ஏற்றவர் ஏராளமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியபோதிலும், 'புரட்சியின் அடிப்படை நோக்கங்களை அலட்சியப்படுத்தினர்' என்ற குற்றச்சாட்டுக்கு ஸ்டாலினை உள்ளாக்கவில்லை. இரஷ்யப் புரட்சியின் வெற்றிக்கு லெனின் எந்த அளவுக்கு முக்கியமானவரோ, அதில் கொஞ்சமும் குறையாத அளவுக்கு, இன்று சோவியத் மக்கள் அடைந்திருக்கின்ற சமுதாய வளர்ச்சிக்கு ஸ்டாலினும் முக்கியமானவர் ஆவார்.

இன்றைய சோவியத் சமுதாயம், எதையும் முன்மாதிரியாகக் கொண்டு அமைக்கப்படவில்லை; முன்மாதிரியாகக் கொள்ளுவதற்கு எதுவுமில்லை.

இன்றைய சோவியத் சமுதாயத்துக்கான நிர்மாணம், 'எதிர்ப்புரட்சி—உள்நாட்டுப் போர்—தலையீட்டுப் போர்—பொருளாதார முற்றுகை—பஞ்சம்—தொத்துநோய் ஆகிய இடுக்கண்களுக்கிடையில்தான் துவங்கப்பட்டிருக்கிறது' என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

இன்றைய சோவியத் முன்னேற்றத்தைப் பார்க்கின்றபொழுது மேலே குறிப்பிட்டிருக்கின்ற அவ்விடுக்கண்கள், 'உண்மையானவைதானு' என்றுகூடக் கேட்கத் தோன்றும். ஆனால், அவ்விடுக்கண்கள் அனைத்தும் உண்மையே ஆகும்.

சோவியத் புரட்சியைச் சீர்குலைக்கவும், சீரழிக்கவும் மேலை வல்லரசுகள் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் முயற்சி செய்யாமல் இல்லை. இட்லர், சோவியத் மக்களை அடிமை கொள்ள நடத்திய மூர்க்கமான தாக்குதலை அம்மக்கள் முறியடித்து வெற்றிவாகை சூடியது, தனிப் பெரும் வீர வரலாறு ஆகும்.

இரஷ்யப் புரட்சிக்குமுன் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சி, புதியதோர் இலட்சியத்தை ஐரோப்பாவில் விதைத்தது என்றாலும், அந்தப் புரட்சியின் வாயிலாக எதிர்பார்த்த விளைவுகள் உருவம் பெற்றிடவில்லை; ஆனால் இரஷ்சியப் புரட்சியோ, நூதனமானதோர் சமுதாய அமைப்பை உருவாக்கி, உலக மக்களிடை என்றென்றும் பட்டுப் போகாத விழிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரெஞ்சுப் புரட்சி பெற்ற தோல்வியிலிருந்து கிடைத்த படிப்பினை, இரஷ்யப் புரட்சியின் வெற்றிக்குப் பெரிதும் துணை செய்திருக்கிறது என்பதை மறப்பதற்கில்லை. 'தோல்வியிலிருந்து அரிய படிப்பினை கிடைக்கிறது' என்பது பொய் அல்ல!

சோவியத் புரட்சி, உலக நாடுகளில் உரிமைக் கனலை மூட்டியிருக்கிறது. ஒரு காலத்தில் அடிமையாகக் கிடந்த நாடுகள் பல, இன்று சுதந்தர நாடுகளாக விளங்கி வருவதற்கு இரஷ்யப் புரட்சி தந்த தூண்டுதலே காரணமாகும்.

இரஷ்யப் புரட்சி தோன்றிய நாளிலிருந்து இந்த ஐம்பதாண்டுக்காலமாக உலக வரலாறு, பெரும் மாற்றங்களைக் கண்டிருக்கிறது. ஏகாதிபத்திய அரசுகளாக இருந்த வல்லரசுகளுக்கு, தங்கள் ஏகாதிபத்திய ஆசையை விட்டொழிக்கத்தக்க நெருக்கடியை இப்புதுமை சமுதாயம் தோற்றுவித்திருப்பதுடன், குறிப்பிடத்தக்க வெற்றியும் கண்டிருக்கிறது.

பிறவிக் குருடன் கண் பெற்ற அற்புதம்போல், 'நம்மால் ஆள முடியுமா? நமக்கு அந்தத் தகுதி இருக்கிறதா? நாம் என்றும் அடிமையாக வாழப் பிறந்தவர்களே' என்ற நினைப்பில் ஆழ்ந்து கிடந்தவர்கள், இரஷ்யப் புரட்சியின் விளைவாகப் புதிய நம்பிக்கை பெற்றனர்; 'நமக்கும் அறிவுண்டு; ஆற்றலுண்டு; ஆளும் திறனுண்டு' என்ற புத்தறிவு பெற்றனர்! 'துன்பமயமாக உள்ள வாழ்க்கையை இன்பமயமாக மாற்றி அமைத்திட நம்மாலும் இயலும்' என்ற விழிப்பைப் பெற்றனர்! 'நம்முடைய சக்திக்கு முன்னால் எந்தச் சக்தியும் விரண்டோடிவிடும்' என்ற உண்மையை உணர்ந்தனர்!

நம்பிக்கை—உரிமை—வீரம் ஆகிய புதிய உணர்வுகளை, வாய் செத்த பூச்சிகளாய்—நடமாடும் மனிதக்கூடுகளாய் இருந்துவந்த சோவியத் மக்கள் பெற்றனர்! அடிமை விலங்குகளை உடைத்தெறிந்தனர்! இம்மாபெரும் மாற்றத்தைத்தான் இன்று உலகம் கண்டுவருகிறது!

இந்த முறையில், மனித குலத்துக்கு நம்பிக்கை நட்சத்திரமாகவும், விழிகாட்டும் ஞாயிற்றின் ஒளியாகவும் விளங்குகின்ற சோவியத் சமுதாயம், தனது ஐம்பதாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிறது. அப்பொன் விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்ற சோவியத் மக்களை நாமும் பாராட்டுகிறோம். அவர்கள் கொள்ளும் இன்பத்தை நாமும் பகிர்ந்துகொள்ளுகிறோம்.

சோவியத் அரசு வாழ்க! சோவியத் சமுதாயம் வாழ்க!

—கா. க.

'தொழில் துறையில் அமைதியில்லை என்பது சரியல்ல'

'ஆளுங் கட்சிக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தவே இந்தப் பிரசாரம்'

'தொழிலாளர்கள் ஆத்திரப்பட்டு வன்செயல்களில் ஈடுபடலாகாது'

'தொழிலதிபர்கள் தங்கள் பிடிவாதப்போக்கைக் கைவிடவேண்டும்' --செய்தியாளரிடை அறிஞர் அண்ணு விளக்கம்

சென்னை, நவ. 10—

"தொழிலாளர் அமைதியின்மை புதிது அல்ல; தமிழ் நாட்டில் ஆளும் கட்சிக்குக் கெட்ட பெயர் ஏற்படச் செய்யச் சில அரசியல் கட்சிகள் இதனைப் பயன் படுத்துகின்றன!

"இந்த ஆண்டு நிலவரத்தில் ஒரே புதிய அம்சம் கோவையில் பல நெசவாலைகள் மூடப்பட்டதேயாகும்; மற்ற அம்சங்கள் கடந்த காலத்தில் எப்போதும் இருந்து வந்தவைதான்!

"எங்காவது, 'தொழிலாளர் தகராறு' எனத் தகவல் கிடைத்தவுடன், 'அரசு உடனடியாகப் போலீசாரை அனுப்பித் தொழிலாளரைக் கைதுசெய்ய வேண்டும்' என்று சிலர் விரும்பலாம்; ஆனால் அதே நபர்கள், சில காலத்துக்குப் பின்னர் வேறு விதமாகத் திரும்பலாம்; 'தொழிலாளர் சம்பந்தமாக தி. மு. க. அரசு அடக்குமுறையைப் பின்பற்றுகிறது' என்று அவர்கள் கூறலாம்!

"சில தொழில் நிறுவனங்களில்தான் பெரிய அளவுக்கு தகராறு நிலவுகிறது; தொழிலாளரைப் பாதிக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக நியாயமான போக்கைத் தொழிலதிபர்கள் மேற்கொள்ள வேண்டும்; அரசு கூறும் சமரச யோசனைக்கு இசைவாக நடந்து கொள்ள வேண்டும்.

"அதே சமயத்தில், தொழிலாளர்கள், வன்முறையை அல்லது மிரட்டலை முழுமையாகக் கைவிட வேண்டும்; வசை மொழிகளைக் கூறுவதையும், ஆத்திரப்பட்டு ஆபாச மொழிகளைக் கூறுவதையும் அவர்கள் கைவிட வேண்டும்"

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள், தொழிலதிபர்கள் தம்மைச் சந்தித்து பேசிய பின் செய்தியாளர்களிடம் பேசுகையில் விளக்கினர்.

சென்னை வணிகக் கழகம், தொழிலதிபர்கள் சம்மேளனம், இந்திய பொறியியல் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் தலைமைச் செயலகத்தில் அறிஞர் அண்ணு அவர்களைச் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்புக்குப் பின்பு அறிஞர் அண்ணு அவர்கள் செய்தியாளர்களிடம் மேலும் கூறியதாவது:—

"தொழிலதிபர்கள் தங்களுக்குள் சிறு குழு ஒன்றை அமைத்துக்கொள்ள வேண்டும் என்றும், அந்தக் குழு இரு வாரங்களுக்கு ஒரு தடவை என்னைச் சந்தித்து தொழிலதிபர்கள் அஞ்சும் அளவுக்குத் தொழில் துறையில் ஏதாவது ஏற்பட்டால் அதனைப் பற்றி என்னிடம் தெரிவிக்கலாம் என்றும் யோசனை கூறினேன். அப்போதுதான், அசம்பாவிதம் எதுவும் ஏற்படாமல் தடுக்க அரசு தக்க நேரத்தில் நடவடிக்கை எடுக்க முடியும்.

வேலைநிறுத்தம் செய்யத் தொழிலாளருக்கு உள்ள உரிமையைத் தொழிலதிபர்கள் முற்றிலும் உணர்ந்துள்ளனர்; ஆனல் தொழிலாளர்கள், 'கேரோ'விலும் வன்முறைச் செயல்களிலும் ஈடுபடக்கூடும் என்றே அவர்கள் முக்கியமாக அஞ்சுகின்றனர்.

திடீரென ஏற்படும் சம்பவங்களைப் பற்றி முன்னதாக எதுவும் செய்ய முடியாது. எனவே, தொழிலதிபர்கள் குழு, விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் ஏற்படாமல் தடுப்பதில் பயனுள்ளதாக இருக்கும்.

'கேரோ'க்கள், அவை பிறந்த பகுதியிலேயே குறைந்துவருகின்றன; அதுபோன்ற நடவடிக்கைகள் நிகழ்ந்துள்ளன; 'கேரோ' சம்பந்தப்பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

பலாத்காரச் செயல்களை இந்த அரசு ஆதரிக்கவில்லை; வசை மொழிகளையும், ஆத்திரப்பட்டு ஆபாச மொழிகளைக் கூறுவதையும் நாங்கள் ஆதரிக்கவில்லை!

தொழிலாளர்களின்மீது தொழிலதிபர்கள் தெரிவித்த சில புகார்கள், 'ஆதாரமற்றவை' என்று எனக்குத் தெரியவந்துள்ளது; தொழில்துறையில் அமைதியின்மை எதுவுமே கிடையாது என்று நான் கூறவில்லை; ஆனல் இது, இந்த ஆண்டு மட்டும் ஏற்பட்ட அமைதியின்மையல்ல: பல ஆண்டுகளாக, முக்கியமாக தீபாவளி காலத்தில் போனஸ் பிரச்சினை குறித்து அமைதியின்மை இருந்துவந்திருக்கிறது!

தொழில் துறையில் நல்லெண்ணம் நிலவப் பாடுபட்டாக வேண்டும்.

பிரதிநிதிகள் இன்று என்னைச் சந்தித்தபோது, 'தொழிலாளர் தகராறுகளுக்குத் தீர்வு காண அரசு தெரிவிக்கும் நியாயமான யோசனைகளை ஏற்கவேண்டும் என்பதைத் தொழில் துறையிலுள்ளவர்கள் சிலரை உணரச் செய்யுங்கள்' என்று அவர்களைக் கேட்டுக்கொண்டேன்.

'சில தொழிலதிபர்கள், பிடிவாதப் போககுக் காட்டுகின்றனர்; பிடிவாதப் போக்கைக் கைவிடுமாறு மற்றத் தொழிலதிபர்கள் அவர்களைத் தூண்டவேண்டும்' என்றும் பிரதிநிதிகளிடம் சொன்னேன்.

உதாரணமாக, 'இந்து' பத்திரிகை அலுவலகத்தில் ஏற்பட்ட தொழில் தகராறைத் தீர்ப்பதற்கு சட்ட அமைச்சர் கூறிய யோசனையை (மத்தியஸ்த பைசல்) நிர்வாகம் ஏற்கவில்லை!

சட்ட வரம்புக்கு உட்பட்டு நடந்து கொள்ளுமாறு தொழிலாளர்களைத் தூண்ட நான் பொறுப்பு ஏற்கிறேன். ஆனல் தகராறுகளுக்குத் தீர்வுகாண்பதற்காக அரசு தெரிவிக்கும் யோசனைகளுக்கு இசைவாக நடந்துகொள்ளுமாறு சக தொழிலதிபர்களைத் தூண்டுவது இத்தொழிலதிபர்களின் பொறுப்பு ஆகும்.

பல விவகாரங்களில், நிர்வாகத்தினருக்கும் — தொழிலாளருக்குமிடையே உடன்பாடுகள் ஏற்பட்டுள்ளன; ஆனல் துரதிருஷ்டவசமாக அவற்றுக்குப் பத்திரிகைகளில் விளம்பரம் கிடைக்கவில்லை; தகராறுகளை மட்டுமே பத்திரிகைகள் எடுத்துக் காட்டியுள்ளன; எனவே, நிர்வாகத்தினருக்கும் — தொழிலாளர்களுக்குமிடையே ஏற்பட்ட உடன்பாடுகளின் விவரங்களை அடுத்த வாரத்திலிருந்து பத்திரிகைகளுக்கு வெளியிடலாமென நினைக்கின்றோம்; இதன் மூலம் உடன்பாடுகளுக்கு நல்ல விளம்பரம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

தொழிலதிபர்களைக் காட்டிலும் தொழிலாளர் தலைவர்கள், தகராறுகளுக்குத் தீர்வு காண்பதற்காக அரசு கூறும் யோசனைகளை ஏற்கத் தயாராக உள்ளனர்.

'எந்த உடன்பாட்டுக்கும் சம்மதிப்பதற்கு முன்பு குறிப்பிட்ட சில தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கத்தான் வேண்டும்' என்று 'இந்து' பத்திரிகை நிர்வாகிகள் பிடிவாதமாக இருக்கின்றனர்; இது ஒரு புது அம்சமாகும்.

மற்ற பிரச்சினைகள்மீது ஓர் உடன்பாடு செய்துகொண்டு திரும்ப வேலையை ஆரம்பிக்கலாம்; ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அம்சத்தைத் தனியாக வழக்கமான நடைமுறையின்படி செய்துகொள்ளலாம் என்று நான் கருதுகிறேன்."

பம்பாயில் கே.ஏ. மதியழகன்

ரோம் செல்லும்வழியில் கழகத் தோழர்களின் வரவேற்பு-வழியனுப்பு

ரோம் நகரில் நடைபெறும் உலக உணவு மாநாட்டில் கலந்துகொள்ள இந்தியக் குழுவின் மாற்றுத் தலைவராகச் செல்லும் தமிழக உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், 3—11—67 இரவு 9-15 மணியளவில் குழுவின் தலைவர் செகசீவன்ராமுடன் விமானம் மூலம் பம்பாய் வந்து சேர்ந்தார்.

விமான நிலையத்தில் அமைச்சரை பம்பாய் தி.மு.க. குழுச் செயலாளர் தொ. து. அன்புச்செழியன், அவைத் தலைவர் துரை, துணைச் செயலாளர் சிதம்பரம், பொருளாளர் ஆரியசங்காரன், மற்றும் கிளைக் கழகச் செயலாளர்களும், தோழர்களும் வரவேற்றனர்.

விமான நிலைய வரவேற்புக்குப் பிறகு தாராவியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வழியனுப்புப் பொதுக்கூட்டத்தில் உணவு அமைச்சர் கலந்துகொண்டார்.

கூட்டத்திற்கு தோழர் சின்னப்பா தலைமைவகித்தார். அமைச்சரின் சுற்றுப்பயணம் வெற்றி பெறவும், அவருடைய பணி குறித்துப் பாராட்டியும் தோழர்கள் அன்புச்செழியன், ஆரியசங்காரன், தியாகராசன், முத்தையா, எஸ். கே. சாமி, குறள்தாசன், முருகேசன், பக்கீர், கு. பாலன், அன்பழகன், நடராசன் ஆகியோர் பேசினர்.

அமைச்சர் மதியழகன் நன்றி தெரிவித்துப் பேசுகையில், அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சியின் மாண்பு குறித்துப் பேசினார்.

அமைச்சருக்கு 30-க்கு மேற்பட்ட அமைப்புகளின் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

அமைச்சரிடம் இடைத் தேர்தல் நிதியாக தோழர் இராமையா ரூ. 2-ம், சே. வி. கே. சாமி ரூ. 2-ம, குர்லா தி. மு. க. கிளை ரூ. 2.25-ம் தந்தனர்.

தோழர் மாணிக்கம் குழந்தைக்கு 'மாறன்' என்று அமைச்சர் பெயர் சூட்டினார்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 தரப்பட்டது.

கூட்டம் முடிந்ததும், இரவு 1-மணிக்கு பம்பாய் கழகத் தோழர்கள் வழியனுப்பிவைக்க விமானம் மூலம் அமைச்சர் ரோம் நகருக்குப் பயணமானார்.

நிலவில் இறங்கிய 'சர்வேயர்--6'

விமானியின் எடையை தாங்குமா என அறிவிக்கும்

வருங்கால விண்வெளி விமானிகள் சந்திரனில் இறங்கக்கூடிய மற்றொரு இடத்தைக் கண்டுபிடிப்பதற்காக அமெரிக்கா செலுத்தியுள்ள 'சர்வேயர்—6', சந்திரனில் இறங்கிவிட்டது.

ஏற்கனவே மூன்று அமெரிக்க 'சர்வேயர் கோள்'கள், இதே போன்ற பணியாற்றியுள்ளன!

கடந்த புதன்கிழமையன்று பூமியிலிருந்து கட்டளை பிறப்பித்து—'சர்வேயர்–6' செல்லும் திசையில் மாறுதல் செய்து—அது, தான் போய் இறங்கவேண்டிய 'சைனஸ் மீடி' இலக்கை நோக்கிச் செல்லுமாறு செய்தனர்.

சந்திரனின் மத்தியிலிருப்பதுதான் 'சைனஸ் மீடி'; இது, 'தாலமேயூஸ்' என்னும் பெரிய மடுவுக்கு 190 மைல் வடக்கிலுள்ளது;

மூன்று கால்கள் உள்ள இந்த 'சர்வேயர்' மெத்தென நிலவில இறங்கியது. அது இறங்கிய இடத்திலுள்ள சந்திரனின் நிலப் பரப்பு, விண்வெளி விமானிகளின் எடையையும் அவர்கள் செல்லும் விண்வெளிக் கலத்தின் எடையையும் தாங்கக்கூடியதா என்னும் விவரங்கள் அது பூமிக்குத் தெரிவிக்கும்!

'மாறனின் வெற்றி மகத்தான ஒன்று'

'எல்லா வகையிலும் கழகம் பெருமைப்பட்டுக்கொள்ள முடியும்'

"'தி. மு. கழகத்துக்குப் பின்னால் நாங்கள் இன்னும் ஒன்று திரண்டு நிற்கிறோம்' என்று வாக்காளர்கள் உறுதி செய்திருக்கிறார்கள்!

"நல்லாட்சியின் பயன் அனைத்தையும் வழங்குவதில் தி. மு. க. தீவிர விருப்பம் கொண்டுள்ளது என்பதை, வாக்காளர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்!

"'மாறுதலுக்கான அவசியம் எழவில்லை' என்பதும் வாக்காளர்களின் கருத்தாகும்"

என்று, சென்னை 'மெயில்' ஆங்கில நாளிதழ், தனது தலையங்கத்தில், தென் சென்னை இடைத் தேர்தல் குறித்துக் கருத்தறிவித்துள்ளது.

'தென் சென்னையின் படிப்பினைகள்' என்ற தலைப்பில் 9—11—67 இதழில் வெளியாகியுள்ள தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"காங்கிரசுக் கட்சி இதை ஒரு கௌரவப் பிரச்சினையாகச் செய்யாமலிருந்தால் கடந்த செவ்வாயன்று நடந்த தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தல் வெற்றி குறித்து தி. மு. க. இப்போது அடைந்த அளவு களிப்பு அடைந்திருக்காது.

1962 முதல் இந்தத் தொகுதி தி. மு. க. வசம் இருந்துவருகிறது; மீண்டும் இத்தொகுதியினைக் கைப்பற்றியது, பறைசாற்ற வேண்டிய ஒன்றல்ல.

ஆளும் கட்சி இந்தத் தேர்தலில் தோற்றிருந்தால், 'எல்லாம் தலைகீழாகிவிட்டது' என்று காங்கிரசு கூறியிருக்கும்; 'பொதுத் தேர்தலில் மக்கள் வைத்த நம்பிக்கையை தி. மு. க. இழந்துவிட்டது' என்று காங்கிரசு கூறியிருக்கும்.

தேர்தல் பிரசாரத்தில் காங்கிரசுத் தலைவர் காமராசர் ஏற்ற தீவிரமான பங்கு, இத்தேர்தலுக்கு மேலும் விறுவிறுப்பு ஊட்டியது. இதை வைத்தே திரு. அண்ணாதுரை, 'இத்தேர்தல், எனக்கும்—காமராசருக்கும் இடையே நடக்கும் பலப் பரீட்சை' என்று வெளிப்படையாகச் சொல்லவேண்டியதாகிவிட்டது!

வடநாட்டு மக்கள் இந்த மாதக் கடைசியில், காங்கிரசுத் தலைவர் பதவிக்கு ஒருவரைத் தேர்வு செய்ய வேண்டிய நிலையில் இருப்பவர்கள்; இந்த இடைத் தேர்தலில் காமராசர் தீவிர பங்கு கொண்டும்கூடத் தனது வேட்பாளரை வெற்றி பெறச் செய்யமுடியவில்லை என்பதிலுள்ள முக்கியத்துவத்தை அவர்கள் ஒதுக்கிவிடமாட்டார்கள்!

தி. மு. க. தன்னுடைய சாதனையைப் பற்றி எல்லா வகையிலும் பெருமைப்பட்டுக்கொள்ள முடியும்.

சுயேச்சைகள் ஐவரின் ஜாமீன் தொகை போனது அனைவரும் எதிர்பார்த்ததே!

தனது தொகுதியில் நன்கு அறிமுகமான காங்கிரசு எதிரியை, கண்ணைக் கவரும் வித்தியாசத்தில் தி. மு. க. வேட்பாளர் தோற்கடித்தது, எதிர்பாராததாகும்! இராஜம் இராமசாமியின் தனிப்பட்ட தோல்வியல்ல!

'தி. மு. கழகத்திற்குப் பின்னால் நாங்கள் இன்னும் ஒன்றெனத் திரண்டு நிற்கிறோம்' என்று வாக்காளர்கள் உறுதி செய்திருக்கிறார்கள்!

'நல்லாட்சியின் பயன் அனைத்தையும் வழங்குவதில் தி. மு கழகம் தீவிர விருப்பம் கொண்டிருக்கிறது' என்பதை, வாக்காளர்கள் அங்கீகரித்திருக்கிறார்கள்!

'மாறுதலுக்கான அவசியம் எழவில்லை' என்பதும் வாக்காளர்களின் கருத்து ஆகும்!

ஓர் ஆட்சி எவ்வளவுதான் நல்லாட்சியாகவும், பயன் தரும் ஆட்சியாகவும் இருந்தால்கூட, 'மாறுதல் வேண்டும் என்பதற்காக மட்டும் ஆட்சியை மாற்ற வேண்டுமா வேண்டாமா' என்பது, மக்களிடத்தில் மட்டுமே இருக்கும் தலையாய உரிமையாகும்.

எனவே, மாறுதல் என்பது—வெறும் கோபம், விரக்தி, பழி சுமத்துவதால் ஏற்பட்டுவிடாது!

பொதுத் தேர்தலைவிட வாக்குப் பதிவு சற்றுக் குறைந்திருந்தாலும், காங்கிரசு வேட்பாளரைவிட திரு. மாறன் வாங்கிய அதிக ஓட்டுகளின் எண்ணிக்கை முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

'நடுத்தர வகுப்பு வாக்காளர்கள் தேர்தலில் அதிக அக்கறை காட்டவில்லை' என்று பெரிதும் கூறப்படுகிறது; 'காங்கிரசு மிகக் குறைந்த வாக்குகள் பெற்றிருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்' என்று கூறப்படுகிறது.

ஏறத்தாழ ஓர் இலட்சம் வாக்காளர்கள் மேலும் வாக்களித்திருந்து—அத்தனை வாக்குகளும் காங்கிரசுக்கே கிடைப்பதாக வைத்துக்கொண்டால்கூட—அப்போதும் தி. மு. க. நல்ல வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கும்."

ஷேக் அப்துல்லா விடுதலையாவாரா?

தற்போது காவலில் இருந்து வரும் காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்வது குறித்து இந்திய அரசினர் மறுபரிசீலனை செய்து வருவதாகத் தெரிகிறது.

"ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்ய காஷ்மீர் முதலமைச்சர் ஜி. எம். சாதிக், மத்திய அரசுத் தலைவர்களுடன் கலந்தாலோசித்தார்; ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்வதை அவர் விரும்புகிறார்" என்று அப்துல்லாவின் மகன் நசிர் அப்துல்லா, மருமகன் ஜும்ஷா ஆகியோர் கூறியுள்ளனர்.

ஆனால், 'அப்துல்லாவை விடுதலை செய்வதற்கு வாய்ப்புகள் இல்லை' என்று மத்திய அரசினர் கருதுகின்றனர். குறிப்பாக ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்வதை துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் விரும்பவில்லை.

காஷ்மீரில் உள்ள காங்கிரசு வட்டாரத்தினர்கூட, அப்துல்லாவின் விடுதலையை எதிர்க்கவில்லை!

உலகத் தமிழ் மாநாடு

கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை வசதி

சென்னை, நவ. 9—

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் ஆசிரியர்களும்—மாணவர்களும் கலந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு, முன்னால் விடுமுறை விடுவதற்குப் பதில் சனவரி 1-ம் நாள் முதல் 16-ம் நாள்வரை விடுமுறை விடுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு தமிழகத்தில் உள்ள கல்வி நிறுவனங்களின் தலைவர்களுக்குத் தமிழக அரசு யோசனை கூறியுள்ளது,

தமிழ் விழாவில் மாணவர்கட்கு விற்பனை செய்வதற்காக கொடிகள் தயாரிக்கப்படவிருக்கின்றன. துவக்கப் பள்ளி மாணவர்களுக்கு 25 காசு கொடிகளும், உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 50 காசு கொடிகளும், கல்லூரி மாணவர்களுக்கு 1 ரூபாய் கொடிகளும் விற்பனை செய்யப்படும்.

திருப்பூர் தொகுதி

விவசாயிகள் முன்னேற்றசங்கம்

22-10-67-ல் திருப்பூர் தொகுதி விவசாயிகள் முன்னேற்றச் சங்க அமைப்புக் கூட்டம் சு. துரைசாமி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

சங்கம் அமைப்பதன் நோக்கம் பற்றி தோழர்கள் எம். கே. பழனிசாமி, எம். பி. கிட்டப்பன், இரா. முருகேசன், என். கந்தசாமி பி.ஏ. பி.எல். ஆகியோர் பேசியபின் கீழ்க்கண்டவர்கள் சங்க நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: மு. அரங்கசாமி; துணைத் தலைவர்: சு. கந்தசாமி; செயலாளர்: சி. முத்துகுமாரசாமி; துணைச் செயலாளர்: ஆர். நடராசன்; பொருளாளர்: சு. அப்புகுட்டி; 18 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் கடன் தொகைகள், உர வகைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள், விவசாயக் கருவிகள் ஆகியவை உரிய காலத்தில் கிடைக்கவும், தொகுதியில் ஏற்கனவே வெட்டப்பட்ட குளங்களைப் பழுது பார்க்கவும், சில இடங்களில் புதிதாகக் குளங்கள் வெட்டவும், விவசாயத் தொழிலில் கூலித் தொழிலாளர்களாக வேலை செய்யும் ஆதித் தமிழர்களுக்குப் புறம்போக்கு நிலங்களில் இலவசமாக வீடுகள் கட்டித் தரவும் தமிழக அரசினரைக் கேட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

உலகை அச்சுறுத்தும் மக்கட் பெருக்கம்

"1966-ம் ஆண்டில், உலகத்தின் மக்கள் தொகை 335.6 கோடியாக இருந்தது" என்று ஐ. நா.-வின் தகவல் நூல் கூறுகிறது.

இப்போது 1.9 சதவீதம், உலக மக்கள் தொகை அதிகரித்துவருகிறது; இம்மாதிரி அதிகரித்துக் கொண்டிருந்தால் 2005-ம் ஆண்டில் உலக மக்கள் தொகை இப்போதுள்ளதைவிட இரட்டிப்பாகிவிடும்.

இயலாத காரியம்

என்கிறார்

டில்லி அமைச்சர்!

"நாடு முழுவதிலும் உள்ள வீட்டு வசதிப் பற்றுக்குறையைச் சமாளிக்க வேண்டுமானால் மொத்தம் சுமார் ரூ. 30,000 கோடி தேவைப்படும். இவ்வளவு பெருந் தொகையைத் திரட்டுவது என்பது உண்மையிலேயே இயலக்கூடிய காரியமல்ல."

--அமைச்சர் ஜெகநாத ராவ்

(வீட்டு வசதி அமைச்சர்கள் மாநாட்டில்)

கோவை மாவட்டத் தமிழாசிரியர் மாநாடு

கோவை மாவட்டத் தமிழாசிரியர் கழக மாநாடு, 26—11—67-ல், சோவை தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளியில் நடைபெறவுள்ளது; அதில், கருத்தரங்கு—பட்டிமன்றம்—பாராட்டு விழா ஆகியவை இடம்பெறுகின்றன.

மாநாட்டில் தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களும், மற்றும் தமிழக அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி ஆகியவர்களும், சட்டப் பேரவைத் தலைவர் ஆதித்தனார் அவர்களும், மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், குன்றக்குடி அடிகளார், டாக்டர் அ. சிதம்பரநாதன் எம்.எல்.சி., ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., கி. ஆ. பெ. விசுவநாதம், மகாலிங்கம், ஜி. ஆர். தாமோதரன், மற்றும் பல தமிழ்ப் பேரறிஞர்களும், புலவர் பெருமக்களும் கலந்துகொள்கின்றனர்.

இம்மாநாட்டில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு பற்றியும், அயல்நாட்டுத் தமிழ் அறிஞர்களை நாம் பயன்படுத்துவது பற்றியும், தமிழாசிரியர்களின் நல்வாழ்வு பற்றியும் தீர்வுகள் காணப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

'தப்பித் தவறி கிடைத்துவிட்ட வெற்றியல்ல'

'தீர சிந்தித்த பின்னரே வாக்களித்தனர்'

"பொதுத் தேர்தலின்போது, 'கழகத்திற்குக் கிடைத்த வெற்றி தப்பித் தவறி—எதிர்பாராதவிதமாகக் கிடைத்த வெற்றி' என்று பரவலாகப் பேசப்பட்டுவந்தது; ஏறக்குறைய இதே கருத்தை, பிரதமர் இந்திராகூட ஒருமுறை தெரிவித்திருந்தார். அந்தக் கருத்து தவறு; 'மக்கள் கண்களை நன்றாகத் திறந்துகொண்டு—தீவிரமாகச் சிந்தித்து—கழகத்திற்கு வேண்டும் என்றே ஓட்டுச் செய்திருக்கிறார்கள்' என்பது திட்டவட்டமாக நிரூபணம் ஆகிவிட்டது"

என்று 'நவமணி' நாளிதழ் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'தென் சென்னை முடிவு' என்ற தலைப்பில் மேலும் எழுதப்பட்டுள்ளதாவது:—

"தென் சென்னை தேர்தலில் தி. மு. கழகம் பெற்ற வெற்றி மகத்தானது.

பொதுத் தேர்தலில் கிடைத்த ஓட்டு விகிதத்தைக் காட்டிலும் அதிகம் பெற்று பெரிய அளவில் கழகம் வெற்றி அடைந்திருக்கிறது.

அப்போது, இந்தத் தொகுதியில் நின்று ஜெயித்த அண்ணாதுரைக்கு, அறுபது சதவிகிதத்திற்கும் சிறிது குறைவாக ஓட்டுகள் கிடைத்தன; உப தேர்தலில் இது 64 சதவிகிதத்தை எட்டிவிட்டது.

சாதாரணமாகப் பார்த்தால், பொதுத் தேர்தலில் கிடைத்த இடத்தைக் கழகம் தக்க வைத்துக்கொண்டிருக்கிறது; 'இதில் வியப்பு என்ன' என்று கேட்கத் தோன்றும்; ஆனால், உப தேர்தல் பிரசாரத்தையும் அப்போது கிளப்பப்பட்ட பிரச்சினைகளையும், விடப்பட்ட சவால்களையும் கவனித்தால், இது, 'உள்ள இடத்தைத் தக்க வைத்துக்கொண்ட வெற்றி மட்டும் அல்ல; அதைக் காட்டிலும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒன்று' என்பது தெளிவாகும்.

உப தேர்தல் ஒன்றுக்கு எதிர்பார்க்கப்படுவதற்கு அதிகமாக 68 சதவிகிதம் பேர் இந்தத் தடவை ஓட்டுச் செய்திருக்கிறார்கள்.

தென் சென்னை பார்லிமெண்டு தொகுதியில் அடங்கியுள்ள அசெம்பிளி தொகுதிகள் அனைத்திலும், தனித் தனியாக, தி. மு. கழகத்திற்கு பெருத்த பெரும்பான்மை கிடைத்திருக்கிறது.

எட்டு மாத கழக ஆட்சியில், 'கழகத்தின்மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்படவில்லையாயினும், பிடிப்பு குறைந்துவிட்டது' எனவும் பேசப்பட்டது; அந்தப் பேச்சுக்கும் ஆதாரம் இல்லை என்பதை தென் சென்னை முடிவு விளக்கிவிட்டது."

கனுங்கோ விவகாரம்— கடைசியாக இருக்கட்டும்

உள்ளும் புறமும்

கவர்னர்கள் நியமன விஷயத்தில் மத்திய அரசு, கசப்பின் உச்சக் கட்டத்துக்கே போய்விட்டிருக்கிறது!

இந்தியாவின் மாநிலங்களில் பாதிக்குமேல் தங்கள் நிர்வாகத்தில் இல்லை என்பதை, 'காங்கிரசு மிக எளிதாகவே மதிக்கிறது' என்பதற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டாக, பீகார் விவகாரம் வந்திருக்கிறது!

'மாற்றுக் கட்சியின் ஆட்சி, கேரளம் ஒன்றில் மட்டும்தான்' என்று இருந்த காலம் வரையில் மத்திய அரசும், காங்கிரசு மேலிடமும் காட்டிவந்த அதே அலட்சிய—விஷமத்தனப் போக்குகளை, '1967 பிப்ரவரிக்குப் பின்னரும் கடைபிடிக்க முயலுவது புதுடில்லி நிர்வாகத்துக்குத்தான் முடிவில் கேடு பயக்கும்' என்பதனைவிட, 'இந்திய அரசியல் அமைப்புக்கே வேட்டு வைப்பதாக இருக்கிறது' என்ற கவலைக்கிடமான உண்மை முதலில் உணரப்பட வேண்டும்!

'கவர்னர் பதவி வேண்டுமா, வேண்டாமா' என்ற கருத்து வேற்றுமை நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும்போது, மத்திய அரசின் அண்மைக் கால கவர்னர்கள் நியமனம், 'அப்பதவி நீடிக்கப்படும் வரையிலாவது உரிய மரியாதையைத் தொடர்ந்து பெறுமா' என்ற சந்தேகத்துக்கு இடம் கொடுத்துள்ளது!

இந்திய அரசியல் சட்டத்தின் 155, 156-வது பிரிவுகளின்படி, மாநில கவர்னர்கள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டு அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கும் வரையில், பதவியில் இருப்பார்கள்!

ஆனால் நடைமுறையில்—மத்திய அரசின் யோசனையின் பேரில் குடியரசுத் தலைவர், மாநில கவர்னர்களை நியமிக்கிறார்!

இந்தியா முழுவதிலும் தாங்களே நிர்வாகத்தில் இருந்தவரையில், புதுடில்லியிலுள்ள காங்கிரசு நிர்வாகம், எல்லா மாநிலங்களுக்குமே பெரும்பாலும், காங்கிரசுக்காரர்களையே கவர்னர்களாகச் சிபாரிசு செய்தது!

சரியாகக் கூறுவதென்றால், கட்சியில் 'ஜீரணிக்கப்பட' முடியாதவர்கள்—'எப்படியும் பதவி தந்தாக வேண்டும்' என்ற நிலையிலிருப்பவர்கள்—முன்னாள் மன்னர்கள் போன்றவர்களைக் கவர்னர் பதவிக்குப் பயன்படுத்தி கட்சியைக் காப்பாற்றிக் கொண்டு வந்திருக்கிறது காங்கிரசு!

'அதே போக்கினை, இனியும் தொடர்ந்து கடைபிடிப்பது முடியாதது—முறையற்றது' என்ற உண்மையினை புதுடில்லி உணர்ந்திருந்தால், கவர்னர் பதவிக்கு உரிய மரியாதையாவது காப்பாற்றப்பட்டிருக்கும்!

ஆனால், நிலைமை இப்போது அதற்கும் மேலாகச் சென்றிருக்கிறது!

> "நித்யானந்த கனுங்கோவுக்கு சுயமரியாதை இருந்தால், அவர் பீகாருக்கு வராமலே இருக்கட்டும்; அதுதான் நல்லது"

என்று, கவர்னராக நியமனம் பெற்றிருக்கும் அவரைப்பற்றி பீகார் முதலமைச்சர் மகாமாய பிரசாத் கூறும் அளவுக்கு ஒரு அவலமான நிலையை உருவாக்கியிருக்கிறது புதுடில்லி!

கூட்டணி ஆட்சிகளைக் கவிழ்ப்பதற்கு, மாநிலக் காங்கிரசுக் கட்சிகளுக்குத் தலைமைப்பீடம் அதிகாரபூர்வமான ஒப்புதல் தந்திருக்கும் வேளையில்—ஒரு பச்சைக் காங்கிரசுக்காரரை—எதிர்க் கட்சியின் நிர்வாகத்தில் இருக்கும் பீகாருக்குக் கவர்னராக நியமித்த புதுடில்லியின் போக்குப் பற்றி முதலமைச்சர் கோபம் கொண்டிருப்பது, நியாயமாகத்தானே இருக்கமுடியும்?

"கனுங்கோவை, எங்கள் மாநிலத்தின் கவர்னராக நியமிக்க வேண்டாம்" என்று, பீகார் மாநில அமைச்சரவை வெளிப்படையாக புதுடில்லியைக் கேட்டுக்கொண்ட பின்னரும், அவரைப் பாட்னா நோக்கி அனுப்புவதில் என்ன நியாயம் இருக்கிறது?

கவர்னர்களை நியமிப்பது குடியரசுத் தலைவரின் பெயரில்தான் என்றாலும், உண்மையில் யோசனை வழங்குவது மத்திய அமைச்சரவை—அதிலும் குறிப்பாகத் தலைமையமைச்சர், உள்துறை அமைச்சர் என்பது எவ்வளவுதூரம் ஒரு நடைமுறையாக இருக்கிறதோ, அதேபோல், நியமிக்கப்படும் கவர்னர்கள், தொடர்புள்ள மாநில முதலமைச்சர்களின் ஒப்புதலைப் பெறுவதும் ஒரு வழக்கம்!

இத்தனையையும் புறக்கணித்து, அதற்கும் மேலாக கனுங்கோவின் சுயமரியாதைக்கே இழுக்கு வரும்வரையில் பிரச்சினையை வளரவிட்டு வேடிக்கை பார்க்கிறது, புதுடில்லி!

கூட்டணி ஆட்சி நடைபெறும் மேற்கு வங்காளத்திலும், கவர்னர் தர்மவீராவுக்கு எதிராக இத்தகைய ஒரு கருத்து நிலவி வருகிறது!

கேரள அமைச்சரவைக்கும் – கவர்னருக்குமிடையே ஒருமித்த போக்கு இல்லை என்பது, எல்லோரும் அறிந்த நிலைமையாகும்!

★ கவர்னர் பதவி—

★ பதவியில் இருக்கும் மனிதர்—

★ அரசியல் சட்ட அமைப்பு முறை—

★ மத்திய மாநில உறவுகள்—

ஆகிய அத்தனைக்கும் இழுக்கு தேடி—கேடுகள் வரவழைத்து ஆபத்தான சூழ்நிலைகளை வலிய விலை கொடுத்து வாங்குகிறது, புதுடில்லி!

ஒருமைப்பாட்டுக்கு உறுதிமொழி—ஒற்றுமை முயற்சி ஆகிய இரண்டையும் மேடைப் பிரசாரத்துக்கும், உதட்டளவுப் பேச்சுக்கும் பயன்படுத்தும் காங்கிரசுக் கட்சி, உண்மையில அவை இரண்டும் குலைவது யாரால்—எப்படி என்பதை இனியேனும் உணர்ந்து செயல்படுமா என்பதனை, நாடு எதிர்பார்க்கிறது!

—எஸ். ஆர்.

நடக்க இருப்பவை

12-11-67

புதுவை

சின்னசாமி மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு செஞ்சி சாலைத் திடலில்; தலைவர்: கு. கோவிந்தராசு; பேசுவோர்: கே. ஆர். சபாபதி, ஈ. குபேர், எஸ். ஆறுமுகம் பி.காம்., கு. முருகையன், சி. பி. திருநாவுக்கரசு பி.காம்., பி.எல்., ஏ: புவியரசு, எம். கிருட்டினசாமி, த. தெய்வநாயகம், சி. என். பார்த்தசாரதி, நந்திவர்மன்.

13-11-67

சென்னை 4-வது வட்டம்

கே. எஸ். பாண்டியன் நினைவு மன்றச் சார்பில் தென் சென்னை வெற்றி விழா; இரவு 7-மணிக்கு வண்ணை சஞ்சீவிராயன் கோயில் தெருவில்; தலைவர்: முத்து; பேசுவோர்: அமைச்சர் முத்துசாமி, என். வி. நடராசன் எம்.எல்.சி., க. அறிவழகன் எம்.ஏ., எம்.எல்.சி., இரா. சுந்தரராசன்.

கீழ ஆம்பூர்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு சாந்தி பிள்ளையார் கோயில் திடலில்; தலைவர்: கே. எஸ். சுப்பிரமணியம்; பேசுவோர்: பரசிமவம், டி. எம். பீர்முகமது, த. நா நாகூர்மீரான், சு. கணபதி, எஸ். ஏ. பெருமாள்.

கருநாடக அரசின் விசித்திர உத்தரவு!

மைசூர் அரசாங்கம், கன்னடம்—ஆங்கிலம் போன்ற மொழிகளைக் கற்கும் மாணவர்களுக்குத் தரப்படும் உதவிப் பணம் பற்றிய உத்தரவை வெளியிட்டுள்ளது.

இந்த உத்தரவில், உதவிப் பணத்தைப் பெற விரும்புகிறவர்கள் செப்டம்பர் 15-க்குள் விண்ணப்பம் அனுப்பவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு வெளியாகியுள்ளது, அக்டோபர் 19-ந் தேதிய அரசாங்கக் கெசட்டில்!

தி.மு.க. இடைத்தேர்தல் - நகராட்சித் தேர்தல் நிதி

		ரூ. காசு
ஏற்கனவே வெளியிட்டுள்ள விவரப்படி		1,10,450.22
கோவை மாவட்டம்		
கோவை வட்டத்தின் சார்பாகச் செயலாளர் திரு. எஸ். ஏ. இராசமாணிக்கம் மூலம்	ரூ. 600.00	
கோவை நகர் 2-வது வட்ட தி. மு. க. கிளை மற்றும் அதன் துணை அமைப்புக்கள் வசூலித்து அனுப்பிய தொகை	ரூ. 20.20	
ஈரோடு வட்டம் கந்தசாமிபாளையம் கிளை எஸ். பாலசுப்பிரமணியம் மூலம்	ரூ. 50.00	670.20
நெல்லை மாவட்டம்		
அம்பாசமுத்திரம் வட்டச் சார்பாக செயலாளர் கே. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் மூலம்		500.00
இராமநாதபுரம் மாவட்டம்		
இராசபாளையம் தோழர் ஆர். பி. ஆதிநாராயணன் மூலம்	ரூ. 500.00	
திருப்பத்தூர் வட்டச் சார்பாக வட்டச் செயலாளர் தோழர் பெரி. அழகு அவர்கள் மூலம்	ரூ. 1500.00	
பரமக்குடி தி. மு. க. கிளை சார்பில் தோழர் எம். அப்துல் ரகீம் மூலம்	ரூ 101 00	
அருப்புக்கோட்டை 7, 8-வது வட்டங்களின் சார்பில் செயலாளர் திரு. பி. பி. என். நல்லதம்பி மூலம்	ரூ. 300.00	2401.00
தஞ்சை மாவட்டம்		
நன்னிலம் வட்டம் ஏனங்குடி தோழர் அப்துல் வகாப்	ரூ. 101.00	
மாயூரம் தோழர் கே. பி. சண்முகசுந்தரம்	ரூ. 100.00	
,, ஜி. இராதாகிருஷ்ணன்	ரூ. 100.00	
,, ஜி. இராமச்சந்திரன்	ரூ. 100 00	401.00
தெ. ஆ. மாவட்டம்		
விழுப்புரம் பார்ப்பனப்பட்டு கிராமத் தோழர்கள்		101.00
மதுரை மாவட்டம்		
மதுரை கீழவெளி வீதி தோழர் வி. முகம்மது இஸ்மாயில்		100 00
ஆக மொத்தம்	ரூ.	**1,14,623.42**

—பொருளாளர், தி.மு.க.

சென்னை நகரில் மீண்டும் 'தீ'யவர் திருவிளையாடல்!

நேற்றும் குடிசைகட்குத் தீவைப்பு தொடர்ந்தது

சென்னை, நவ. 11—

சென்னையில் நேற்றிரவும் தீவிபத்து ஏற்பட்டு 60 குடிசைகள் எரிந்து சாம்பலாயின.

நேற்றைக்கு முன்னாள் எழும்பூர் பூபதி நகரில் 75 குடிசைகளும், இராஜா அண்ணாமலைபுரம் நாராயணசாமி தோட்டத்தில் தி.மு. கழகத்தவர் குடிசைகள் இரண்டும் தீவிபத்துக்குள்ளாகிய செய்தி ஏற்கனவே வெளியாகியுள்ளன; இந்தத் தீ விபத்துக்கள் தொடர்பாக மூன்று காங்கிரசுக்காரர்கள் கைதாகியுள்ளனர். அவர்களைப் பொறுப்பில் விடுவிக்க வட சென்னைக் காங்கிரசுத் தலைவர் தாமோதரன், தென் சென்னைக் காங்கிரசுத் தலைவர் பார்த்தசாரதி செட்டி, மற்றும் காங்கிரசுக்காரர்களான எஸ். விஜயலட்சுமி, வி.ஆர். இராதாகிருஷ்ணன் ஆகியோர் போலீசுக் கமிஷனரைச் சந்தித்து கேட்டுக்கொண்டனர். ஆனால், கைதானவர்கள் விடுவிக்கப்படவில்லை.

நேற்றிரவு 11-30 மணியளவில் மயிலாப்பூர் பஜார் தெருவும்—பாலஸ் தெருவும கூடுமிடத்தில் உள்ள பாட்சா தோட்டத்தில் திடீரென்று தீவிபத்து ஏற்பட்டது. இங்கு 500-க்கு மேற்பட்ட குடிசைகள் உள்ளன.

இத்தீவிபத்தை முதன் முதலில் பார்த்தவர், அப்போதுதான் 'டூட்டி'க்கு வந்த தாமோதரன் என்னும் போலீசுக்காரர் ஆவார்; உடன் அந்த போலீசுக்காரரும், பொதுமக்களும் சேர்ந்து தீயணைப்பில் ஈடுபட்டனர். அடுத்து தீயணைக்கும் படையினரும் வந்து சேர்ந்தனர்.

மொத்தம் 60 குடிசைகள் சாம்பலாயின. உயிர்ச் சேதம் எதுவுமில்லை.

தீவிபத்தில் சிக்கிய வெற்றிலை பாக்குக் கடையில் இருந்த சோடா புட்டிகள் உடைந்து நாலாபக்கமும் கண்ணாடித் துண்டுகள் சிதறிக்கிடந்தன!

தென் சென்னை இடைத் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இப்படி சென்னைக் குடிசைப் பகுதிகளில் தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன.

குடிசைவாழ் மக்கள் தி.மு.க. ஆதரவாளர்கள் என்பதால், திட்டமிட்டு இக்கொடிய செயலில் சிலர் ஈடுபட்டிருக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது.

பொதுத்தேர்தலுக்குப் பின், கழக ஆட்சி ஏற்பட்டு நாளுக்கு நாள் செல்வாக்குப் பெற்று வருவதைக் காணப் பொறுதகயவர்கள், மூன்று திங்களுக்கு முன், குடிசைப் பகுதிகட்குத் தொடர்ந்து தீ மூட்டுவதில் ஈடுபட்டதும், போலீசாரின் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக அந்தச் செயலுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டதும் நினைவுகூரத்தக்கது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக- திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி, அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அறிவகம் அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை [illegible]) [illegible]